# பீட்டர் மாமா

## மருத்துவரை கண்டுக்காத மாம்பழ வேட்பாளரை பற்றி சொல்கிறார்

# wikiயானந்தா

"மாம்பழ வேட்பாளருக்கு சிக்கலாமே..." என்று கேட்டபடி வந்தார் பீட்டர் மாமா.

"மாங்கனி மாவட்டத்தில் மாம்பழக்கட்சி வேட்பாளராக போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், அவர்களின் கூட்டணிக்கு தலைமை வகிக்கும் இலைகட்சி வேட்பாளராகவே மாறிவிட்டாராம். சமீபத்தில் நடந்த வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் நான் ஜெயித்தால் மாம்பழக்கட்சி எம்எல்ஏ என்பதை விட, இலைகட்சி எம்எல்ஏவாகத்தான் இருப்பேன் என்று ரத்தத்தின் ரத்தங்களிடம் உருகினாராம். ஆனால் இதை அவர்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லையாம். இந்த நிலையில் தொகுதியில் உள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் வேட்பாளர் சார்பில் ஒரு மெசேஜ் பறக்குதாம். அதில் எம்ஜிஆர், அம்மா, எடப்பாடி ஆசி பெற்ற மாம்பழத்திற்கு ஓட்டு போடுங்க என்று குறிப்பிடப்பட்டுள்ளதாம். மாம்பழ கட்சியில் மாநில துணைப் பொதுச்செயலாளராக இருக்கும் அவரை, முதற்கட்ட பட்டியலிலேயே வேட்பாளராக அறிவித்தவர் எங்க டாக்டர். ஆனால் அவரது பெயரை மெசேஜில் போடாமல் இலை கட்சி தலைவர்களின் பெயரை மட்டும் போட்டிருக்காரு. இது என்ன நியாயம் என்று செம கடுப்பில் இருக்காங்களாம் மாம்பழத் தொண்டர்கள். இப்படி ரத்தத்தின் ரத்தங்கள் கண்டுக்காமலும், மாம்பழத் தொண்டர்கள் கடுப்பில் இருப்பதாலும் வானம் பார்த்த பூமியா நிக்குதாம் மாங்கனி மாவட்டத்தின் மேற்கு தொகுதி" என்றார் விக்கியானந்தா

"ஸ்டார் பேச்சாளர்கள் பணத்தையும் ஆட்டைய போட்டுட்டாங்களாமே.. ஷாக் மேட்டரா இருக்கே.." என்று சிரித்தார் பீட்டர் மாமா.

"அதிமுகவில நடிகர் சரவணன், மனோபாலா, டைரக்டர்கள் நாஞ்சில் பி.சி.அன்பழகன், ஆர்.சுந்தராஜன் போன்ற ஸ்டார் பேச்சாளர்களும், 1200 மற்ற பேச்சாளர்களும் இருக்காங்க... இவர்களை ஒவ்வொரு தேர்தலில் பிரசாரத்துக்கும் பயன்படுத்துவது வழக்கம். கடந்த முறை சட்டப்பேரவை தேர்தலின் போது ஸ்டார் பேச்சாளர்களுக்கு ரூ.6 லட்சம் வரை வழங்கப்பட்டது. அதே போல மற்ற பேச்சாளர்களுக்கு ரூ.3 லட்சம் வழங்கப்பட்டது. தற்போது விலைவாசி ஏற்றத்துக்கு ஏற்ப இந்த சட்டமன்ற தேர்தல் பிரசாரத்துக்கு ஸ்டார் பேச்சாளர்கள் ரூ.10 லட்சம் வரை கிடைக்கும் என்று எதிர்பார்த்து இருந்தாங்க... மற்ற பேச்சாளர்கள் ரூ.5 லட்சம் வரை வரும் என்று நினைத்து இருந்தாங்க... கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையை போல, அவர்களுக்கு அதிர்ச்சி தான் காத்திருந்ததாம். தற்போது ஸ்டார் பேச்சாளர்களுக்கு வெறும் ரூ.4 லட்சம் தான் கிடைத்ததாம். ரூ.3 லட்சம் வாங்கிய பேச்சாளர்களுக்கு ரூ.2 லட்சம், ரூ.2 லட்சம் வாங்கின பேச்சாளர்களுக்கு ரூ.1 லட்சம் தான் கிடைத்ததாம். ஆனா ஸ்டார் பேச்சாளர்களுக்கு கடந்த முறையை போல ரூ.6 லட்சம் கட்சி சார்பில வழங்கப்பட்டதாம். ஆனால் இடையில் புகுந்து ரூ.2 லட்சத்தை யார் உருவினாங்க என்று கேள்வி தற்போது நட்சத்திர பேச்சாளர்கள் மத்தியில் எழுந்திருக்காம். அதே போல மற்ற பேச்சாளர்களுக்கும் ரூ.1 லட்சம் வரை ஆட்டையை போட்டு விட்டாங்களாம். பணத்தை ஆட்டையை போட்டதை பார்த்து பேச்சாளர்கள் அதிர்ச்சியில் உச்சத்தில் போய் இருக்காங்களாம்" என்றார் விக்கியானந்தா.

"ஆறு சீட்டு வாங்கிட்டு போனாங்க... ஆளையே காணோம்னு பதறுறாங்களாமே.."

"தமிழக சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணியில், தமாகாவுக்கு 6 சீட் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்சியினர், தமிழகம் முழுவதும் அந்தந்த பகுதி அதிமுகவினருடன் இணைந்து, தேர்தல் பணியாற்ற வேண்டும் என்பது ஒப்பந்தம். ஆனால், கோவை மாவட்டத்தில் தமாகா என்ற ஒரு கட்சியையே காணோம். காரணம், தனக்கு வால்பாறை தொகுதியில் 'சீட்' வழங்கப்படவில்லை என்ற காரணத்தால், மாநில துணை தலைவரும், முன்னாள் எம்எல்ஏவுமான கோவை தங்கம், ஒட்டுமொத்த தமாகா கட்சியையும் துடைத்தெறிந்து கொண்டுசென்றுவிட்டார். அதிரடியாக நிர்வாகிகள், தொண்டர்கள் என அனைவரும் கூண்டோடு ராஜினாமா செய்துவிட்டதால், கோவை மாவட்டத்தில் தமாகா என்ற கட்சியே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், அதிமுக வேட்பாளர்கள் பிரசாரத்தில், தமாகா கொடியை பார்க்கவே முடியவில்லை. பாஜ மற்றும் பாமக கொடிகள் மட்டுமே தெரிகிறது. இதனால், கோவை மாவட்டத்தை சேர்ந்த அதிமுக முக்கிய புள்ளிகள் பலர், விரக்தி அடைந்துள்ளனர். அதனாலதான், 'என்னப்பா... ஆறு சீட் வாங்கிட்டு போனாங்க... தேர்தல் பிரசாரத்துல ஒருத்தரையுமே காணோமே...' என புலம்பி தள்ளுகின்றனர்" என்றார் விக்கியானந்தா.

"கன்னியாகுமரி மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தலை அமமுகவும், அதன் கூட்டணி கட்சியான தேமுதிகவும் புறக்கணித்து விட்டதே..."

"ஆமா.. அந்த கூட்டணி சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை. தேமுதிகவுடன் கூட்டணி சேர்ந்த பிறகும் இதுபற்றி இரு கட்சிகளை சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் சிலரிடம் இதுகுறித்து பேசப்பட்டு உள்ளது. கடந்த 2019 மக்களவை தேர்தலில் போட்டியிட்டு, நாம் தமிழர் கட்சியை விட குறைவான வாக்குகள்தான் வாங்கினோம். இந்த முறை நம்ம கட்சிக்கு வேண்டாம் என அமமுக நிர்வாகிகள் கூறி விட்டார்களாம். தேமுதிகவினர் ஒருபடி மேலே போய் வேட்பாளராக நிற்க நம்மிடம் ஆள் இல்லை என கூறி விட்டனர். வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்த நிலையில், நாடாளுமன்ற தொகுதியை இரு கட்சிகளுமே புறக்கணித்தது அக்கட்சி தொண்டர்களை சோர்வடைய செய்துள்ளது. ஒரு காலத்தில் தேமுதிகவில் சீட் வாங்க கடும் போட்டி இருக்கும். எங்கள் தலைவர் உடல்நிலை மோசமானதால், வேட்பாளரை நிறுத்த கூட முடியாத நிலை உள்ளது என தேமுதிகவினர் சோகத்துடன் கூறி வருகிறார்கள்" என்றார் விக்கியானந்தா. ■

தினகரன்

## வாட்ஸ்அப் ட்ரெண்டிங்

ஏண்டா.. அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போற...?

டாக்டர் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக் பண்ண சொன்னாரு..அதாண்ணே...!!!

## மிஸ்டர் பிராப்ளம்

திருவில்லிபுத்தூரில் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியிடம் ஒரு நிருபர் அமமுக பற்றி கருத்து கேட்க, அமைச்சர் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டார். 'இந்தா பாரு... அமமுக பத்தி கேக்கிறதா இருந்தா இப்பவே கிளம்பிரு... இல்ல சட்டுனு அடிச்சிருவேன். தேவையில்லாத பிரச்னைய இழுத்து விட்றீங்க. நானும் வாய்க்கு வந்தத பேசிடுறேன். பின்னாடி நான்தான் அவஸ்தைப்பட வேண்டி கிடக்கு. அதான் உங்களுக்கு நான் பேட்டியே கொடுக்குறதில்லை" என மிரட்டும் தொனியில் பேசியது சர்ச்சையாகி உள்ளது.

## டிப்ஸ்

முள்ளங்கிக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டால் வயிற்றுப்பூச்சிகள் அழியும். குடல் புண் ஆறும். உடல் சூட்டைக் குறைக்கும். புளியேப்பத்தைப் போக்கும். சிறுநீரைப் பெருக்கும்.

## சொல்லிட்டாங்க...

6 லட்சம் கோடி ரூபாயாக கடன் தொகையை உயர்த்தி, தமிழக மக்களை கடனாளியாக உயர்த்திய பெருமை அதிமுக ஆட்சியையே சாரும்.

- திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்

நான் ஊர்ந்து சென்று முதலமைச்சரானேன் என கூறுகிறார்கள். நான் என்ன பாம்பா, பல்லியா ஊர்ந்து செல்வதற்கு. நானும் மனுஷன்தான்.

- முதல்வர் எடப்பாடி பழனிசாமி

திமுக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளித்தால் தமிழகத்தை தமிழகம் ஆளும். இல்லையென்றால், தமிழகத்தை பாஜதான் ஆளும்.

- தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி

உயர் அதிகாரிகள் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் எழுப்பப்படும் நிலையில், அவர்களை பாதுகாக்கும் அணுகுமுறையையே தமிழக அரசு எடுத்து வருகிறது.

- மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன்

## ஓடிடிக்கு படம் இயக்கும் பாலா

நாச்சியார் படத்துக்கு பிறகு துருவ் நடிப்பில் வர்மா படத்தை இயக்கினார் பாலா. அந்த படத்தை தயாரிப்பு நிறுவனம் நிறுத்திவிட்டு, ஆதித்ய வர்மா பெயரில் புது படம் எடுத்தது. இதையடுத்து கடந்த 2 வருடமாக படம் இயக்காமல் இருக்கிறார் பாலா. இந்நிலையில் அதர்வா நடிப்பில் அவர் படம் இயக்குவதாகவும் மல்டி ஸ்டார் கதையை இயக்க உள்ளதாகவும் பல்வேறு தகவல்கள் உலா வந்தன. இந்நிலையில் ஓடிடிக்காக அவர் படம் இயக்க ஒப்பந்தமாகியுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது. இந்த படம் நெட்பிளிக்ஸில் வெளியாகும் என கூறப்படுகிறது. படத்தில் நடிப்பவர்கள் இன்னும் தேர்வாகவில்லை.

## பிரசாந்த் ஜோடியாக பிரியா ஆனந்த்

இந்தியில் ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் வெளியாகி 3 தேசிய விருதுகள் பெற்ற படம், அந்தாதுன். இதை அந்தகன் என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்து இயக்கி தயாரிக்கிறார், நடிகர் தியாகராஜன். ஆயுஷ்மான் குரானா ஏற்றிருந்த பார்வையற்றவர் வேடத்தில் நடிக்கும் பிரசாந்த், பியானோ வாசிக்க சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். ராதிகா ஆப்தே கேரக்டரில், பிரசாந்த் ஜோடியாக பிரியா ஆனந்த் நடிக்கிறார். தபு வேடத்தில் சிம்ரன் மற்றும் கார்த்திக், ஊர்வசி, யோகி பாபு, கே.எஸ்.ரவிகுமார், வனிதா விஜயகுமார், பூவையார், செம்மலர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார். தற்போது சென்னையில் படப்பிடிப்பு நடந்து வருகிறது. கண்ணெதிரே தோன்றினாள், ஜோடி, தமிழ் ஆகிய படங்களுக்குப் பிறகு பிரசாந்த், சிம்ரன் இப்படத்தில் இணைந்து நடிக்கின்றனர்.

## 'என்ன தகுதி இருக்கு?' கேள்வி கேட்ட நிருபருக்கு பிரியங்கா பதிலடி

ஆஸ்கர் விருது விழா ஏப்ரல் 26ம் தேதி நடைபெறுகிறது. இதில் போட்டி பிரிவில் இடம்பெற்றுள்ள படங்களின் பட்டியலை சமீபத்தில் லண்டனில் பிரியங்கா சோப்ராவும் அவரது கணவர் நிக் ஜோன்சும் வெளியிட்டனர். இது குறித்து ஆஸ்திரேலியாவை சேர்ந்த நிருபர் பீட்டர் போர்ட் என்பவர், சமூக வலைத்தளத்தில், 'ஆஸ்கர் பட்டியலை வெளியிட பிரியங்காவுக்கு என்ன தகுதி இருக்கு?' என கேட்டார். இதற்கு பதிலளித்துள்ள பிரியங்கா, '60க்கும் அதிகமான இந்திய படங்களில் நடித்திருக்கிறேன். படிப்படியாக முன்னேறி, பே வாட்ச் என்ற ஹாலிவுட் டிவி தொடரில் நடித்தேன். பிறகு ஹாலிவுட் படங்களிலும் நடித்துள்ளேன். இந்த தகுதி போதுமா?' என கேட்டுள்ளார்.

## ஸ்லிம் தோற்றத்துக்கு மாறிய ஷாலினி பாண்டே

அர்ஜுன் ரெட்டி தெலுங்கு படத்தில் அறிமுகம் ஆனவர் ஷாலினி பாண்டே. தமிழில் கொரில்லா, 100 பெர்சன்ட் காதல், நிசப்தம் ஆகிய படங்களில் நடித்தார். குண்டான உடல் தோற்றத்தில் இருந்த இவர், இப்போது திடீரென ஸ்லிம் தோற்றத்துக்கு மாறியுள்ளார். ஷாலினி பாண்டே, பாலிவுட்டில் ரன்வீர் சிங் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கிறார். இதற்காகவே அவர் உடல் மெலிவதற்காக டயட், ஜிம்மில் உடல்பயிற்சி என கடுமையாக உழைத்தாராம். அதற்கு இப்போது பலன் கிடைத்திருப்பதாக அவர் சொல்கிறார்.

## இயக்குனர் ஹரி மருத்துவமனையில் அட்மிட்

அருண் விஜய், பிரியா பவானி சங்கர் நடிக்கும் படத்தை ஹரி இயக்கி வருகிறார். இதன் படப்பிடிப்பு பழனியில் நடந்து வந்தது. திடீரென கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஹரி, அங்குள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். படப்பிடிப்பு குழுவில் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இதனால் ஹரிக்கும் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியானது. இதையடுத்து படப்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அருண் விஜய் மற்றும் படக்குழுவினர் சென்னை திரும்பியுள்ளனர்.

## மகேஷ்பாபுவுடன் இணையும் தமன்னா

தெலுங்கில் மகேஷ்பாபுநடித்த ஆகாடு படத்தில் தமன்னா நடித்துள்ளார். பிறகு மகேஷ்பாபுவின் சாரிலேரு நீகேவரு படத்தில் ஒரு பாடலுக்கு அவர் நடனமாடினார். இப்போது மீண்டும் மகேஷ்பாபுவுடன் இணைகிறார். ஆனால் இந்த முறை படத்துக்காக அல்ல. விளம்பரத்தில் நடிப்பதற்காக. மகேஷ்பாபு பல்வேறு விளம்பர படங்களில் நடிக்கிறார். அவர் நடிக்க உள்ள புதிய விளம்பரத்தை அர்ஜுன் ரெட்டி பட டைரக்டர் சந்தீப் ரெட்டி வாங்கா இயக்குகிறார்.

இதில்தான் தமன்னாவும் நடிக்க உள்ளார்.

## நீட் தேர்வுக்கு பதில் சீட் தேர்வு நடத்தப்படும்

### மநீம தேர்தல் அறிக்கையில் தகவல்

▶ கோவை ரேஸ்கோர்சில் உள்ள தனியார் ஓட்டலில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

கோவை, மார்ச் 20: கோவையில் உள்ள தனியார் ஓட்டலில் மக்கள் நீதி மய்யம் தேர்தல் அறிக்கையை அதன் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டார். தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள்:

கல்வித்தர மேம்பாட்டுக்கு ஒட்டு மொத்த தமிழக பொருளாதார உற்பத்தி மதிப்பில் 6 சதவீதம் ஒதுக்கப்படும். கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். அனைவருக்கும் தரமான இலவச கல்வி லட்சியம். அதை தமிழ்நாட்டின் கடனை அடைத்த பிறகு தான் படிப்படியாக அந்த இலக்கு அடுத்த 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

சென்னையில் டாக்டர் கலாம் அறிவுசார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் அமைக்கப்படும்.

விவசாயம், தொழில் துறை மற்றும் உற்பத்தி துறை, சேவைத்துறையின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்து *15 முதல் 20 சதவிகித* வளர்ச்சியை அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிலையாக தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தின் ஒட்டு மொத்த பொருளாதாரம் ரூ.70 லட்சம் கோடி அளவில் உயர்த்தப்படும். தனிநபர் வருமானத்தை ரூ.7 லட்சம் முதல் ₹10 லட்சமாக உயர்த்தப்படும்.

தமிழகத்தின் ₹5.7 லட்சம் கோடி கடனை அடைக்கும் விதத்தில், பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்படும். விவசாயம், தொழில் துறையில் மிகப்பெரும் மாற்றத்தை உருவாக்கி வரி இல்லா வருமானத்தை உறுதி செய்து, அதன்மூலம் தமிழ்நாட்டின் கடனை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் வரிக்கு நிகரான வருமானத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல் 3 ஆண்டுகளில் நஷ்டத்தில் இயங்கும் தமிழக பொதுத்துறை நிறுவனங்கள் முற்றிலும் சீரமைக்கப்படும். அதில் பணியாற்றும் பணியாளர்களை அதன் பங்குதாரர்களாக்கப்படுவார்கள். மாநில சுயாட்சியை மீட்டெடுக்கவும், மாநில பட்டியலில் இருக்கும் விவசாயத்தை, மாநில அரசின் விவசாய மேம்பாட்டு சட்டமியற்றி தமிழக விவசாயிகளை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகம் முழுவதும் நீட் தேர்வுக்கு பதிலாக மாநில நுழைவுத் தேர்வு (சீட்) நமது பாடத்திட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படும். இது போன்று பல வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்தன.

SBI பாரத ஸ்டேட் பாங்கு
கிளை : அச்சரபாக்கம்

தங்க நகை ஏல அறிவிப்பு

எங்களது கிளையில் கீழ்கண்ட தங்கநகையின் பேரில் கடன் பெற்று தேதி முடிந்ததும், நோட்டீஸ் அனுப்பியும் கடனை முடிக்காததால் இந்த ஏல அறிவிப்பு மூலம் உடனே தொகையை 26.03.2021 மதியம் 1.00 மணிக்குள் செலுத்தி நகையை மீட்டுக்கொள்ள வேண்டியது. தவறினால் 26.03.2021 மதியம் 3.00 மணியளவில் அடமானம் வைத்த நகைகள் வங்கி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

கீழ்கண்ட நபர் காலமாகியிருந்தால் அன்னாருடைய வாரிசுதாரர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும், இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப் போடவோ வங்கி மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதையும் தெரியப் படுத்துகிறோம். ஏல நிபந்தனைகளை வங்கியில் அறிந்து கொள்ளலாம்.

| கடன்தாரர் பெயர் | வங்கி கணக்கு எண் | நகையின் எடை கிராமில் |
|---|---|---|
| S. நடராஜன் | 38918148571 | 25.30 wt |

பின்குறிப்பு

1. ஏலதாரர்கள் தங்கள் PAN விவரங்களை கட்டாயம் எடுத்து வரவேண்டும், உரிய KYC ஆவணங்கள் அசல் மற்றும் அதன் நகல் உள்ளவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
2. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழு தொகையையும் செலுத்த வேண்டும். இல்லாவிடில் ஏலம் முன் தொகை திருப்பி தரப்படமாட்டாது. மேற்கூறிய ஏலம் வங்கி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது.

தேதி : 20.03.2021
இடம் : அச்சரப்பாக்கம்

கிளை மேலாளர்
பாரத ஸ்டேட் பாங்கு.

YES BANK
பதிவு பெற்ற மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்
எஸ்பேங்க் லிமிடெட் ஒன் இன்டர்நேஷனல் சென்டர், டவர் 2, 15வது தளம், சேனாபதி பபட் மார்க், எல்பின்ஸ்டோன்(மே), மும்பை-400013.
கிளை : கோல்மோ ஒன், டவர் சி,2வது தளம், பிளாட் எண்.14,3வது மெயின் ரோடு, அம்பத்தூர், சென்னை-600058
CIN:L65190MH2003PLC143249, மின்னஞ்சல்:communications@yesbank.in, இணையதளம்:www.yesbank.in

அசையா சொத்துகள் விற்பனை குறித்த அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறு சீரமைத்தல் மேலும் கடனீட்டு சொத்து உரிமை அமலாக்க சட்டம் (2002) பிரிவு 8(6) பாதுகாப்பு வட்டி(அமலாக்கம்) சட்டம் 2002ன்படி, அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்னணு ஏல அறிவிப்பு.

இதன் மூலம் கடன்தாரர்/ சக கடன்தாரர்/ஜாமீன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுவாக பொது மக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பானது, கீழே கையொப்பமிட்டவர் எஸ்வங்கி லிட். அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், எஸ் வங்கியில் கடன் பெற்ற M/S மணம் ப்ரூட் ப்ராடக்ட்ஸ் பிலிட்.(கடன்தாரர்) M/S மணம் அக்ரோ கான்சன்ட்ரேட்(கடன்தாரர்) திரு ஆர்.பி.மோகன்(ஜாமீன்தாரர்), திருமதி குணவதி மோகன்(ஜாமீன்தாரர்) திரு எம்.ஆனந்தராஜ்(ஜாமீன்தாரர்)ஆகியோர் 25 பிப்ரவரி 2016ல் வாங்கிய கடன் தொகை வட்டியுடன் 27 ஏப்ரல் 2021 தேதியில் செலுத்த வேண்டிய ரூ.2,64,86,823.63 (ரூபாய் இரண்டுகோடியே அறுபத்துநான்கு லட்சத்து எண்பத்து ஆறு ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று மற்றும் அறுபத்து மூன்று காசுகள் மட்டும்) கடனை வசூலிக்க அவர் பிணையமாக கொடுத்து இருந்த சொத்துகள் உள்ளது உள்ளபடி விற்பனை செய்யப்பட உள்ளது. **இந்த சொத்துக்கான அடிப்படை விலையாக ரூ.65,10,000 (இந்திய ரூபாய் அறுபத்து ஐந்து லட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் முன் வைப்புத் தொகையாக ரூ.6,51,000(இந்திய ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்து ஒராயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.**

சொத்து விவரம்:

**பள்ளிக்கரணை அருகே வேளச்சேரி தாம்பரம் சாலையில் அமைந்துள்ள காசாகிராண்ட் ரிவேரா அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் பிளாக் எண் 3, இரண்டாவது மாடியில் உள்ள கே-05 3 படுக்கை அறை கொண்ட 1585 சதுர அடி குடியிருப்பு (பிளிந்த் ஏரியா 1325 சதுர அடி + பொது இடம் 260 சதுர அடி) மேலும், பிரிக்கப்படாத சொத்தில் 750 சதுர அடி ஒரு கார் நிறுத்துமிடம் சேர்ந்தது.**

**மின் ஏலம் விடப்படும் தேதி மற்றும் நேரம்:** 27 ஏப்ரல் 2021 முற்பகல் 11.00மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை கூடுதலாக 5 நிமிடத்துடன்.
**ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்:** ஏப்ரல் 26, 2021 மாலை 4 மணிவரை.
**சொத்துகளை பார்வையிடும் தேதி:** 10 ஏப்ரல் 2021 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை.

இந்த விற்பனைக்கான வழி மற்றும் விதிமுறைகள் விரிவாக தெரிந்து கொள்ள http://10.0.49.5/about-us?media auction-property---- கடன்தாரர் இணையதளம் www.yesbank.in

டெண்டர் ஆவணங்களை, மின் ஏல விவரங்களை பெறுவதில் ஏதாவது சிரமங்கள் இருந்தால் அல்லது சொத்துகளை பார்வையிடுவது தொடர்பாக, அல்லது சொத்துகள் தொடர்பான விவரங்கள் அறிய விரும்பினால் எஸ்பேங்க் லிட் அலுவலர் திரு. வீரேஷ் அவர்களை 8073076472 என்ற செல்போன் எண்ணில் அல்லது veeresh.ms@yesbank.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். அதேபோல் M/S இ-புரோக்யூர்மென்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (ஆக்ஷன் டைகர்) அலுவலர்களை, ஏலத்துக்கான உதவி எண்கள்: 079-61200587/509 அல்லது support@auctiontiger.net என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

**கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கான விற்பனை அறிவிப்பு**

இதனை அறிவிப்பாக ஏற்று இந்த அறிவிப்பு வெளியான 30 நாட்களில் உரிய தொகையை செலுத்த வேண்டும்.

ஒம்/
தேதி 20 மார்ச் 2021, இடம்: சென்னை. (அதிகாரப்பூர்வ அலுவலர்)